பதிவு எண் : M. 5511 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : பங்குனி 28 (10-4-68) புதன் ★ வெளியூர் : பங்குனி 29 (11-4-68) வியாழன் [இதழ் : 249

டெல்லிக்கு ஜி.டி. நாயுடு வீடு

குறைந்த செலவில் விரைவாக வீடு கட்டி முடிக்கும் திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் திட்டத்தை, மத்திய வீட்டு வசதித் துறை பரிசிலனை செய்துவருவதாகத் தெரிகிறது.

"டெல்லியில் சேரிப் பிரச்சினையைத் தீர்க்க இவ்வகையான வீட்டுத் திட்டம் பெரிதும் பயன்படும்"

என்று தொழில் மேதை திரு. ஜி. டி. நாயுடு தெரிவித்துள்ளார்.

மொழிச் சிக்கலுக்குத் தீர்வு --- மத்திய அமைச்சரவை ஆய்வு

அண்ணா கருத்தை எதிர்பார்க்கிறது புதுடெல்லி

ஆட்சிமொழிச் சட்டம் திருத்தப்படலாம்

புதுடில்லி, ஏப். 10-

இந்தி பேசாத மாநில மக்களிடையும் - இந்தி பேசும் பகுதியைச் சேர்ந்த மக்களிடையும், மத்திய அரசுத் துறைகளுக்கான பணிகளில் சேருபவர்களுக்கு ஏற்படக்கூடிய மொழிச் சுமையைச் சமநிலைக்குக் கொண்டுவருவதற்கான திட்டத்தை மத்திய அரசு தற்போது பரிசிலனை செய்துகொண்டிருக்கிறதாம்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆட்சி மொழித் தீர்மானத்தினால் இந்தி பேசாத மாநிலங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதகமான நிலையை நீக்க, 'ஆட்சி மொழிச் சட்டத்தைத் திருத்த வேண்டும்' என்று இந்தி பேசாத மாநிலத்தைச் சார்ந்த அரசியல் தலைவர்களும், மாணவர்களும் கோரும் நியாயமான கோரிக்கைக்கு ஏற்ப, மத்திய அமைச்சரவையைச் சார்ந்த குழு, இப்பிரச்சினையை விவாதித்ததாகத் தெரிகிறது.

முதலில், 'இப்பிரச்சினையின்பேரில் தமிழக முதலமைச்சரின் கருத்தினை அறிய வேண்டும்' என்று அக்குழு முடிவு செய்திருப்பதால், மேற்கொண்டு பரிசிலனை செய்யப்பட்ட பிரச்சினையைத் தற்போது நிறுத்தி வைத்திருப்பதாகத் தெரிகிறது.

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அண்மையில் அமெரிக்கா செல்லவிருக்கின்ற காரணத்தினால், அவர் மீண்டும் தாயகம் திரும்பிய பின்னர்தான் இப்பிரச்சினைமீது இறுதியான முடிவை மத்திய அரசு எடுக்க இருப்பதாகவும் அறியப்படுகிறது.

கள்ள நோட்டு அச்சடிப்பு குடிசைத் தொழிலாகிறது!

காங்கிரசு ஆளும் கருநாடக மாநிலத்தில் 170 பேர் கைது!

முன்னாள் சட்டமன்றக் காங்கிரசு உறுப்பினர் - தொழிலதிபர் - மடாதிபதி ஆகியோரும் சிக்கினர்

காங்கிரசுக் கட்சி ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் கருநாடக மாநிலத்தில் கள்ள நோட்டு அச்சிடுவது, குடிசைத் தொழிலைப்போல் பெருகிக்கொண்டிருக்கிறது!

இதுவரையில் இது தொடர்பாக சித்ரதுர்கா, தார்வார், பீஜாப்பூர், தென் கனரா, வட கனரா, தும்கூர், இரெய்ச்சூர், கோலார், மைசூர், பெல்லாரி, ஷிமோகா, குல்பர்கா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 170 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் முன்னாள் சட்டமன்றக் காங்கிரசு உறுப்பினர் ஒருவர்—இரண்டு தொழிலதிபர்கள்—ஓர் அரசாங்க ஊழியர் -மூன்று கூட்டுறவுச் சங்க ஊழியர்கள்—ஒரு போலீசுக்காரர்—ஒரு மடாதிபதி ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

கள்ளப் பயணிகள் கொடுத்த அபராதம்!

சென்னை சென்டிரல் இரயில்வே நிலயத்தில் மார்ச் 23-ஆம் நாள் முதல் 31-ஆம் நாள் வரை டிக்கெட் இல்லாமல் பயணம் செய்தவர்களிடமிருந்து தென்னக இரயில்வேக்கு ரூ. 27,000 வசூலாகி இருப்பதாகத் தெரிகிறது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் கிராம நலத் திட்டங்கள்

நிறைவு விழாக்களில் அமைச்சர்கள் பங்கேற்பர்

சென்னை, ஏப். 9—

செங்கற்பட்டு மாவட்டத்தில் 27 ஊராட்சி ஒன்றியங்களில் 1967—68-ல் நிறைவேற்றப்பட்டுள்ள கிராம நலத் திட்டங்களின் நிறைவு விழாக்கள் ஏப்ரல் 30-ஆம் நாள்வரை நடைபெறவிருக்கின்றன. இவ்விழாக்களில் தமிழக அமைச்சர்கள் அனைவரும் கலந்துகொள்ளவிருக்கிறார்கள்.

கிராம நலத் தண்ணீர்த் திட்டம், வேளாண்மை சடங்குகள், கால்நடை மருத்துவமனைகள், ஊராட்சி மன்றக் கட்டிடங்கள், சீரணியின் பணிகள், பள்ளிகள் ஆகிய 232 வேலைகள் இம்மாவட்டத்தில் முடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

கொள்ளையில் இராணுவத்தினர் பங்கு

செய்கோன், ஏப். 10—

இரயில் தண்டவாளங்கள், உருக்குத் தைப்புப் பட்டைகள், விலையுயர்ந்த சுவிட்சுகள், இரயில்வே கருவிகள், இரயில் பெட்டிக் கதவுகள் ஆகியவைகளடங்கிய சுமார் ரூ. 11.25 கோடி மதிப்புள்ள பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

கொள்ளை நடந்த ஒரு திங்களுக்குப்பின் வியட்நாம் இராணுவப் படையைச் சார்ந்தவர்களே இக்கொள்ளையில் ஈடுபட்டிருப்பதாக வியட்நாம் அரசாங்க அதிகாரிகளும், இராணுவத் தலைவர்களும கண்டுபிடித்துள்ளனர்.

அடிக்கல் நாட்டு விழாவுக்கு ஆன செலவு ரூ. 10 இலட்சம்!

இந்திரா காந்தி பங்கேற்ற கோலாகல விழா

ஆளுக்கு ரூ. 80 செலவில் ஆடம்பரச் சிற்றுண்டி விருந்து!

வெளிநாட்டில் கையேந்திப் பெறும் பணம் 'ஏழை இந்தியாவில்' செலவாகும் விதம்!

தான்பாத், ஏப். 10—

பொக்காரோ உருக்குத் தொழிற்சாலைத் திறப்பு விழா, கடந்த சனியன்று நடைபெற்றது. இவ்விழாவுக்கு மட்டும் சுமார் ரூ. 10 இலட்சம் செலவழிக்கப்பட்டது.

பொக்காரோ தொழிற்சாலையின் தலைவர் திரு. என். வாஞ்சுவிடம், 'விழாவுக்கு எவ்வளவு செலவிடப்பட்டது?' என்று செய்தியாளர்கள் கூட்டத்தில் கேட்கப்பட்டபோது, பதில் சொல்லாமல் அவர் தட்டிக்கழித்துவிட்டார்! பிறகு வெவ்வேறு அதிகாரிகள் வாயிலாகக் கேட்டறிந்த பிறகு, சுமார் ரூ. 10 இலட்சம்வரையில், செலவழிக்கப்பட்டுள்ள இரகசியம் அம்பலமாயிற்று!

'ஒரு திறப்பு விழாவுக்கு இத்தனை இலட்சமா?' எனச் செய்தியாளர்கள் அதிர்ச்சியடைந்தனர்! இத்தொகையை அரசுதான் கொடுத்தாக வேண்டும்!

இத்தனை இலட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்பட்டும், சரியானபடி போலீசு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை! சுமார் 1000 போலீசுக்காரர்களும், 300 போலீசு அதிகாரிகளும் பாதுகாப்புக்காகப் போடப்பட்டிருந்தும், கூட்டத்தினரைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டனர்!

தொழிற்சாலையை அமைப்பதற்காக அந்த இடத்திலிருந்து விரட்டப்பட்ட குடிமக்கள் பெருந் திரளாக வந்து, தலைமையமைச்சர் இந்திராவின் கார் முன்பு அமர்ந்துகொண்டு மறியல் செய்தனர்; அவர்களைக் கட்டுப்படுத்தத் திறனற்ற போலீசார், பார்த்துக் கொண்டிருந்தனராம்! தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்து அவர்கள் முழக்கம் எழுப்பினர்! தங்கள் மனக் குறையைத் தீர்க்க அதிகாரிகள் தவறிவிட்டனர் என்று குரல் எழுப்பினர்!

ஆர்ப்பாட்டக்காரர்கள் பணிந்து போக மறுத்துவிட்டனர்; பின்னர் தலைமையமைச்சர் இந்திரா, தமக்கேயுள்ள சாமார்த்தியத்துடன் நடந்துகொண்டதால், விரும்பத்தகாத விளைவுகள் ஏதும் ஏற்படாமல் தவிர்க்க முடிந்ததாம்! ஆர்ப்பாட்டக்காரர்களின் குறைபாட்டைக் கேட்கச் சம்மதித்தார்!

எண்ணற்ற வகையில் பண்டங்கள் பரிமாறல்!

பொக்காரோ ஆலைத் திறப்பு விழாவுக்கு சுமார் 400 பிரமுகர்கள். உல்லாச ஒட்டலான பொக்காரோ ஒட்டலில் இந்திராவுடன் விருந்துண்ண அழைக்கப்பட்டிருந்தனர்!

ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்ட சிற்றுண்டித் தட்டில் எண்ணற்றவகையான பண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன!

அதிகாரிகள் தந்த கணக்குப்படி ஒரு நபருக்கு ரூ. 80 விதம் சிற்றுண்டி அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது!

இப்படியும் நடந்தது!

இதற்கு முன்னதாக, தலைமையமைச்சர் இந்திரா வருகைச்

(1-ம் பத்தி பார்க்க)

(5-ம் பத்தி தொடர்ச்சி)

செய்தியைச் சேகரிக்க பொக்காரோ விமானத் தளத்துக்குச் செல்லச் செய்தியாளர்கள் அனுமதிக்கப்படாததற்கு, அவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்; பின்னர், அவர்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டது.

தலைமை அமைச்சரின் ஊர்வலத்தைப் புகைப்படம் எடுக்கப் பத்திரிகைப் புகைப் படக்காரர், ஒரு ஜீப்பில் ஏறிக்கொள்ள அனுமதி கேட்டபோது, ஒரு போலீசுப் பெரிய அதிகாரி அவரை எள்ளி நகையாடினாராம்!

பொகாரோ தொழிற்சாலை, இரஷ்யாவின் கடனைப் பெற்று நிறுவப்படவிருப்பது தெரிந்ததே!

விலை ஏற்றத்தின் உச்ச ஆண்டு!

மத்திய அமைச்சர் தகவல்

புதுடில்லி, ஏப். 10—

"இந்தியாவின் அண்மைக்காலப் பொருளாதார வரலாற்றிலேயே 1967-ம் ஆண்டு, விலைவாசி உயர்வின் உச்சக்கட்டமான ஆண்டாகும்"

என்று நாடாளுமன்றத்தில், துணை நிதியமைச்சர் திரு. கே. சி. பந்த் கூறியிருக்கிறார்.

"1966-ம் ஆண்டைவிட, மொத்த விலைக் குறியீட்டெண் 15.8 சதவிகிதம் 1967-ல் உயர்ந்திருக்கிறது"

என்றும் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது :-

"இதற்கு முக்கியக் காரணம், வேளாண்மைத் தொழில் நெருக்கடியால் ஏற்பட்ட 25.7 சதவிகித விலை உயர்வேயாகும்.

"உணவுப் பொருள்களிலேயெ வெல்லம்தான் அதிகமான விலை உயர்வுக்கு (127 சதவிகிதம்) உட்பட்டிருந்தது; அதாவது, 1966-ல் 183.5 சதவிகிதமாக இருந்தது, 1967-ல் 417.5 ஆக உயர்ந்திருக்கிறது.

"பயறு, பருப்பு வகைகளில் 50 புள்ளிகளுக்குமேல் விலை உயர்ந்திருந்தன.

"ஆக, உணவுப் பொருள்கள், 167.4 புள்ளியிலிருந்து 227.9 புள்ளிக்கு உயர்ந்தன.

கச்சா சணல், சணல் பொருட்கள், வேர்க்கடலை ஆகியவைகளின் விலைகள் ஓரளவுக்கு இறங்குமுகமாக இருந்திருக்கின்றன.

ரூ. 66-இலட்சம் செலவில்
சீரமைப்புத் திட்டம்
தமிழக அரசு அனுமதி

தஞ்சை, ஏப் 10—

காவிரித் திட்டத்தில், மண்ணியாறு, ஜி. ஏ. கால்வாய் பாசன ஆறுகளைச் சீர்படுத்தத் தமிழக அரசு, ரூ. 66.48 இலட்சம் அனுமதித்திருக்கிறது.

இத்திட்டம் படிப்படியாக மூன்றாண்டுகளில் நிறைவேற்றப்படும்.

திருத்தங்கூரில் சீரணிப் பணி

திருத்துறைப்பூண்டி, ஏப். 6—

திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த திருத்தங்கூரில் உள்ள ஒரு வாய்க்காலை சீர்படுத்தும் பணியில் 400 சீரணித் தொண்டர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இப்பணியை கோட்டச் சீரணித் தலைவர் திரு. வை. சுப்பிரமணியம் தலைமையேற்று இயக்கி வருகிறார்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. சண்முகசுந்தரம், மன்னார்குடி உதவி கலெக்டர் திரு. இரத்தினசாமி, ஒன்றிய ஆணையர் திரு என். மாரிமுத்து ஆகியோர் மண்ணை வெட்டி வேலையைத் துவக்கிவைத்தனர்.

ஊராட்சி வளர்ச்சி அலுவலர், சமூக நல ஊழியர், கிராம சேவக்குகள் ஆகியோரும் வாய்க்கால் வெட்டும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

சுமார் 2 மைல் நீளத்துக்கு ரூ 3,000 மதிப்புள்ள வேலை நடைபெற்று வருகிறது.

நெய்வேலியில்
மாணவர் இராசேந்திரன் மன்றம்

நெய்வேலி புதுநகரிலுள்ள 16, 17 ஆகிய வட்டங்களை இணைத்து மாணவர் இராசேந்திரன் நினைவு மன்றம் என்ற அமைப்பு தி. மு. க. நகரச் செயலாளர் எஸ். சீத்தாராமன் தலைமையில் அமைக்கப்பட்டது; கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : கருப்பண்ணன்; செயலாளர் : பி. வி. சீனிவாசன்; பொருளாளர் : முனுசாமி; துணைச் செயலாளர் : க. இராமசாமி; வட்டப்பிரதிநிதி ஏ. கிருஷ்ணன்; மற்றும் 15 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

என். சி. சி.-க்குப் பதில் மாற்றுத் திட்டம்

தமிழக அரசு தயாரித்துவிட்டது

இந்திச் சொற்களை நீக்க டில்லி மறுத்தால் செயல்படுத்தப்படும்

சென்னை, ஏப் 9—

தற்போது தமிழகத்தில் நடைமுறையிலிருக்கும் என். சி. சி. பயிற்சியில் ஆணைகளாகப் பயன்படுத்தப்படும் இந்தச் சொற்களுக்குப் பதிலாக ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்த மத்திய அரசு மறுத்துவிடுமானால், என்.சி.சி. திட்டத்திற்குப் பதில் மாற்றுத் திட்டமொன்றை தமிழக அரசு தயாரித்திருப்பதாகத் தெரிகிறது; இந்த மாற்றுத் திட்டத்தின் ஆணைச்சொற்கள் ஆங்கிலத்தில்தான் இருக்கும் என்று அறியப்படுகிறது.

மத்திய அரசின் மறுப்புக் காரணமாக மாற்றுத் திட்டத்தைச் செயல்படுத்த மாநில அரசு நிர்ப்பந்தப்படுத்தப்படுகின்ற சூழ்நிலைக்குத் தள்ளப்படுமானால், அத்திட்டம், என். சி. சி.-க்குப் பதில் செயல்படுத்தப்படும்.

என். சி. சி. பயிற்சியில் ஆணைச்சொற்கள்—பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே இருக்கின்ற காரணத்தினாலும், ஒரு சில சொற்களே இந்தியில் இருப்பதாலும், மாநில அரசு, 'இப்பிரச்சினையை மறுபரிசீலனை செய்ய வேண்டும்' என்று மத்திய அரசு கூறியிருக்கும் யோசனையைத் தமிழக அரசு பரிசீலித்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

மக்களின் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை மதிக்கின்ற வரையில் இந்திச் சொற்களுக்குப் பதிலாக ஆங்கிலச் சொற்களே பயன்படுத்தப்படவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலேயே மீண்டும் மாநில அரசு, மத்திய அரசுக்குத் தனது கருத்தினைத் தெரிவிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

"ஆங்கிலத்தோடு இந்தியையும் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டிருப்பதில், என். சி. சி.-யில் இந்திச் சொற்களுக்குப் பதிலாக ஆங்கிலம் பயன்படுத்தப்பட வேண்டும் என்று எதிர்ப்புக் கிளப்பியிருப்பது நியாயமானதாகாது"

என்று மத்திய அரசின் ஆளுங்கட்சி வட்டாரத்தின் ஒரு பகுதியினர் கருத்தாகயிருக்கிறது.

ஆனால், எந்த காரணத்தைக் கொண்டும் இப்பிரச்சினையில், தமிழக அரசு முன்பு எடுத்த நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ளாது.

என். சி. சி. பயிற்சி காரணமாக மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய நன்மைகள் மறுக்கப்பட்டுவிடக்கூடாது என்பதில், மாநில அரசு உறுதியாக இருப்பதாகவும் அறியப்படுகிறது.

அண்ணா பெயரில் உபகாரச் சம்பளம்

முஸ்லிம் நிறுவனத்தின் சீரிய நடவடிக்கை

ஏழை மாணவர்களுக்கு வசதி

திருச்சி, ஏப். 10—

திருச்சியிலுள்ள முஸ்லிம் நிறுவனமான நாதர்ஹவேலி தர்க்காவைச் சேர்ந்த தர்மகர்த்தா குழுவினர், குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன், முதலமைச்சர் அண்ணா, சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா ஆகியோரின் பெயர்களில் 30 உபகாரச் சம்பளங்கள் வழங்கத் தீர்மானித்துள்ளனர்.

இதற்கென ஆறரை இலட்சம் ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது; இதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து உபகாரச் சம்பளம் வழங்கப்படும்.

30 உபகாரச் சம்பளங்களில் கலை, எஞ்சினீயரிங், மருத்துவக் கல்லூரிகளில் ஏழை மாணவர் படிக்க தலா 10 உபகாரச் சம்பளங்கள் ஒதுக்கப்படும்.

50 சதவிகித உபகாரச் சம்பளங்கள் முஸ்லிம் சமூகத்தினருக்கும், மற்றவை பிற வகுப்பு மாணவர்களுக்கும் ஒதுக்கப்படும்.

இலங்கை 'அகதி'களுக்கு மறுவாழ்வு

நான்கு மாவட்டங்களில் ஆயத்த நடவடிக்கைகள்

சென்னை, ஏப். 10—

இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்படும் இந்திய அகதிகளின் மறுவாழ்வு வேலைகளைக் கவனிப்பதற்காகத் திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், திருச்சி ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் உதவி மறுவாழ்வளிப்பு இயக்குநர் பதவியை ஏற்படுத்தத் தமிழக அரசு அனுமதித்திருக்கிறது. இந்தப் பதவி, மாவட்ட ரெவினியூ அதிகாரி தகுதிக்குச் சமமாக இருக்கும்.

இந்தியா–இலங்கை உடன்பாட்டின்படி, அடுத்த 15 ஆண்டுகளில் இலங்கையிலிருந்து இந்திய மரபினர் 5 இலட்சத்துக்கும் அதிகமான பேர் திருப்பி அனுப்பப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது; முதல் குழு இவ்வாண்டு மே மாதம் வரத் துவங்கும். ஆண்டுதோறும் சுமார் 35,000 பேர் வரக்கூடும்.

அகதிகளில் பெரும்பாலோர் மேற்கூறிய நான்கு மாவட்டங்களிலிருந்தும் சென்று இலங்கையில் குடியேறியவர்கள் என்றும், ஆகவே அவர்களுக்கு இந்த நான்கு மாவட்டங்களில்தான் மறுவாழ்வு அளிக்க வேண்டியிருக்குமென்றும் அரசு கருதுகிறது.

அகதிகளில் பெரும்பாலோரை இந்த மாவட்டங்களில்தான் குடியமர்த்த வேண்டியிருக்கும். இதையொட்டி மதுரையிலும், திருச்சியிலும் சில தொழிற்சாலைகளை நிறுவ அரசு திட்டமிட்டிருக்கிறது.

மலேய--சீன மொழியில் திருக்குறள்

கோலாலம்பூர், ஏப். 10—

மலேசியப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த இந்திய வரலாற்றுத் துறையினர், மலேய மொழியிலும், சீன மொழியிலும் திருக்குறளை வெளியிட்டிருக்கிறது.

காகித ஆடை உடுத்தும்

காலம் வருகிறது!

காகித உடுப்பு, காகிதத் துவாலை, காகித விரிப்பு, காகிதத் திரைச் சீலை, காகித மேசை விரிப்பு — இப்படி நூற்றுக்கணக்கான பொருள்கள்—காகிதத்தில் தயாரிக்கப் பெறுகின்றன அமெரிக்காவில்!

ஆனால், காகிதமாயினும் சாதாரண காகிதமல்ல — வலுவுள்ள காகிதம்; சிறப்பாகத் தயாரிக்கப் பெற்றதாயினும் விலை அதிகமில்லை; நெய்த சாதாரண துணியோடு ஒப்பிடுகையில் விலை மலிவு; எனவே, அதனுடன் போட்டியிடக் கூடியது! நிறைய விற்பனை வாய்ப்பும் அதற்கு இருக்கிறது!

அமெரிக்காவின் தலைசிறந்த காகிதக் கம்பெனிகளில் ஒன்று இருவகைக் காகிதங்களைத் தயாரிக்கிறது.

'எஸ். ஆர். எம்.' என்பது ஒரு வகை; இது, முகம்—கைகால் துடைப்பதற்கான சிறு துவாலைகள், பெரிய துவாலைகள், துவட்டுவதற்குப் பயன்படும் துவாலைகள் முதலியவற்றைத் தயாரிக்கப் பயன்படுகிறது.

கம்பெனியின் இன்னொரு வகை காகிதத்துக்கு 'டி.எப் எல்.' எனப் பெயர்; இது, 'எஸ்.ஆர்.எம்.' காகிதத்திலிருந்து முற்றும்மாறுபட்டது தலையணை உறை, மகளிர் சட்டை, விரிப்பு முதலியவற்றைத் தயாரிக்கக்கூடிய வகையில் மெல்லிய மிருதுவான காகிதம்; ஆனால், வலுமிக்கது.

மருத்துவமனைகளிலும், இல்லங்களிலும் பயன்படும் பலப் பல பொருள்கள் இக்காகிதங்களைக் கொண்டு தயாரிக்கப்படலாம்.

கிருமிகள் பரவும் அபாயம் எப்பொழுதும் இருந்துவரும் காரணத்தால், ஒரு தடவை பயன்படுத்திவிட்டு வீசி எறிந்துவிடக்கூடிய பொருள்களைத்தான் மருத்துவமனைகள் மிகவும் விரும்புகின்றன. இத்தகைய பொருள்களைப் பயன்படுத்துவதும் எளிது; கிருமிகள் பரவி ஆபத்து ஏற்படும் வாய்ப்பும் கணிசமாகக் குறையும். மேலும், திரும்பத் திரும்பப் பயன்படுத்தக்கூடிய பொருள்களை வைத்திருப்பதற்கு வேண்டிய இட வசதியும் காகிதப் பொருள்களுக்குத் தேவையில்லை.

சேய் வளர்ப்பு நிலையங்கள், அவசரச் சிகிச்சை செய்யப்படும் அறைகள், குணமடைந்துவரும் நோயாளிகள் இருக்கும் அறைகள், தீவிர சிகிச்சை அளிக்கப்படும் அறைகள், தீப்புண்களுக்குச் சிகிச்சை செய்யப்படும் அறைகள் முதலியவிடங்களில் — அழுக்கு, கறைபடுதல் முதலியன பெரிய பிரச்சினையாக இருக்கும் இடங்களில்—காகிதப் பொருள்களைப் பயன்படுத்துவது விரும்பத்தக்கதாகும்.

இந்த நிலையங்களில், நஞ்சுப் பரவாமல் இருப்பதற்குத் தீவிரக் கண்காணிப்பும் கட்டுப்பாடுகளும் அவசியமாகும்.

10 கோடி டாலர் மதிப்புள்ள காகிதப் பொருள்கள் விற்பனையாகும் வாய்ப்பு இதனால் ஏற்படுகிறது. அவை மருத்துவத்திற்கும், மகப்பேறு மருத்துவத்துக்கும் பயனாகும் பொருள்கள் இவை. தற்சமயம் இந்த இரண்டு மருத்துவத்துக்கும் காகிதப் பொருள்கள் மிகக் குறைவாகத்தான் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் இது பன்மடங்கு பெருகும்.

தொழில் துறையில், துடைப்பதற்குப் பயன்படுத்தும் துணியின மதிப்பு 20 கோடி டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பொழுது இதில் 8 சதவீதம்தான் காகிதப் பொருள் பயன்படுகிறது.

ஒட்டல்கள், மோட்டல்கள் எனக் கூறப்படும் கார்களுடன் தங்கும் விடுதிகள், பள்ளிகள், இரயில்வே நிலையங்கள், விமானக் கூடாரங்கள், இராணுவம், முதலியவற்றிலே ஒரு தடவை பயன்படுத்திய பின்னர் தூக்கி எறியக்கூடிய படுக்கைகள் விரிப்புகள், டவல்கள், துண்டுகள், மேசை விரிப்புகள், குட்டைகள், சீருடைகள் முதலியன பயன்படுத்தப்படும் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது.

முழுக்க முழுக்க இத்தகைய நெய்யப்பெறாத ஆடைகளையே அணியும் அளவுக்கு மகளிர் நாகரிகம் திடீரென்று திரும்பிவிடுமென்று எதிர்பார்க்க முடியாது.

ஓட்டல், மோட்டல்களும்கூட, நூற்றுக்கு நூறு இந்தப் பொருள்களை வாங்கத் தொடங்கிவிடும் என்றும் அண்மையில் எதிர்பார்க்க முடியாது.

ஆனால் அடுத்த சில ஆண்டுகளுக்குள் இல்லங்கள், மருத்துவமனைகள், தொழில்கள், ஆகியவற்றிலே இப்பொருள்களுக்குக் கிராக்கி கணிசமாகப் பெருகும்.

இவையனைத்தையும் கருத்தில் கொண்டு பார்த்தால் இப்பொருள்களுக்குத் தற்சமயம் மார்க்கெட் 100-கோடி டாலருக்கு மேல் போய்விடும். இது மொத்த மார்க்கெட்டின் 5-சதவீதம்தான். அடுத்த ஐந்தாண்டுகளில் இது ஆண்டுக்கு 20-சதவீதம் பெருகிக் கொண்டே போகும்.

'விழிப்புடன் அரசு அனைத்தையும் கவனித்துவருகிறது'

'உரிய நேரத்தில் திரைப் படத் தொழில்பற்றி முடிவு செய்யும்'

ரூ. 100-கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளதும், 1,35,000 ஊழியர்கள் ஈடுபட்டுள்ளதுமான திரைப்படத் தொழிலை அரசே ஏற்று நடத்த வேண்டிய நிலைமை வரக்கூடுமாம்!

இதுபற்றித் தெரிவித்த உயர் அதிகாரி ஒருவர், "இத்தொழிலை நம்பி வாழ்கின்றவர்களின் பிழைப்புக்கு 'ஆபத்து' ஏற்படுவதைப் பார்த்துக்கொண்டு அரசு இருக்க முடியாது" எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

"பிறர்மீது பழிசுமத்தும் அளவுக்குத் திரைப்பட நடிகர்கள்மீதும் பழிசுமத்த இயலும்" என்று தெரிவித்த அவர், அதுபற்றி மேலும் குறிப்பிட்டதாவது :—

"திரைப்பட நடிகர்கள்தான் பெரிய குற்றவாளிகள்; திரைப்படக் கொட்டகைகள் முன் அவர்கள் மறியல் நடத்துவது, சாராயக் கடைகளின்முன் சாராயக் கடத்தல்காரர்கள் மறியல் நடத்துவது போல் இருக்கிறது.

"அனைத்தையும் அரசு, உன்னிப்பாகக் கவனித்து வருகிறது; நேரம் வந்ததும், உரிய நடவடிக்கை எடுக்கும்."

கடன் வாங்கும் நாடு கடன் தருகிறது

அந்நிய நாடுகளிலிருந்து கடன் பெறும் இந்தியத் துணைக்கண்டம், '1960-ம் ஆண்டிலிருந்து 1967-ம் ஆண்டு வரையில், பல நாடுகளுக்கு வளர்ச்சிக் கடன் வழங்கியிருக்கிறது' என்ற செய்தியும் தரப்பட்டிருக்கிறது.

அது வழங்கியிருக்கும் மொத்தத் தொகை சுமார் ரூ. 41 கோடியாம்; அதன் விவரம் வருமாறு :—

பர்மா :	ரூ. 20 கோடி
ஆப்கனிஸ்தான் :	ரூ. 1 கோடி
சிக்கிம் :	ரூ. 1 இலட்சம்
பூடான் :	ரூ. 42 இலட்சம்
நேபாளம் :	ரூ 2.8 கோடி
இலங்கை :	ரூ. 7 கோடி
இந்தோனேசியா :	ரூ 10.58 கோடி

மத்திய அரசின் சாதனை இதுதான்!

"உலக நாடுகளில், கிலோ 50 காசுக்கு சர்க்கரை விற்கப்படுகிறது; இந்தியாவில் கட்டுப்பாட்டு விலை ரூ. 1.75; ஆனால், பகிரங்க மார்க்கெட்டிலோ, ரூ. 4.50-க்கு விற்கப்படுகிறது; இதுதான் மத்திய விவசாயத் துறை அமைச்சகத்தின் பிரமாதமான சாதனை போலும்"

என்று மக்களவையில், சுதந்திராக் கட்சி உறுப்பினர் சிவப்பா, கிண்டலும் கேலியும் கலந்து கூறியிருக்கிறார்!

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தமிழ் கற்க ஊக்கம்

தேர்ச்சி பெற்றோருக்கு ரூ. 1,000 பரிசு

சென்னை, ஏப். 9—

தமிழ் தெரியாத ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்குத் தமிழ் ஆர்வத்தைத் தூண்டும் பொருட்டு, எஸ்.எஸ்.எல்.சி. தரத்துக்குச் சமமான தமிழ்த் தேர்வு ஒன்றை நடத்தத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இத்தேர்வில் தேறுபவர்களுக்கு ரூ. 1,000 பரிசு அளிக்கப்படும்.

ஆறு ஆண்டு ஊழியம் முடிவடையாத ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளே இத்தேர்வுக்கு உட்காரத் தகுதியுடையவர்கள்.

ஒவ்வொரு ஆண்டும் சூலைத் திங்களில் நடைபெறும் இத்தேர்வுக்கு வேண்டிய பாடத் திட்டங்களைப் பப்ளிக் சர்வீசு கமிஷன் தயாரித்துள்ளது; அதற்கு அரசு ஒப்புதல் அளித்துவிட்டது.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்கான தமிழ்ப் பாடப் புத்தகமே இதற்கும் பொருந்தும்.

தேர்வு இருவகைப்படும்; எழுத்தும் தேர்வு ஒன்று; வாய்மொழித் தேர்வு ஒன்று. எழுதும் தேர்வில் தமிழ் இலக்கணக் கட்டுரை எழுதுதல்—தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல் — ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தல் ஆகியவை அடங்கும்.

வாய்மொழித் தேர்வில் தமிழில் உரையாடும் திறமை சோதிக்கப்படும்.

தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாத ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள், தமிழகத்தில் சுமார் 40-பேர்கள் தற்போது பணிபுரிவதாகவும், இவர்களில் மேற்படி தேர்வுக்கு உட்காரக்கூடிய தகுதியுள்ளவர்கள் சுமார் 12-பேர்கள் தான் இருக்கமுடியும் என்று கூறப்படுகிறது.

அகில இந்திய சர்வீசைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், அவர்கள் பணிபுரியும் வட்டாரங்களின் மொழியைக் கற்பதற்கு ஊக்குவிக்கவேண்டுமென்று மத்திய அரசு கூறியுள்ள யோசனைக்கிணங்கவே இந்தப் பரிசுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

நமச்சிவாயர் நினைவுச் சொற்பொழிவு

சென்னை நக்கீரர் கழகத் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி சார்பில் வித்துவான் நிறைநிலை—முதனிலை—தமிழ் எம்.ஏ. ஆகிய தேர்வுகளுக்கு உரிய இலக்கிய இலக்கணச் சொற்பொழிவுகள் சென்னை மாநிலக் கல்லூரி தமிழ்த் துறை அறையில் துவங்கியது.

முதல் நாள் சொற்பொழிவினைச் சென்னைக் கல்லூரி கல்வித் துணை இயக்குநர் பெ. திருஞானசம்பந்தம் பி.ஏ.,பி.டி., 21—3—68 மாலை தொடங்கிவைத்தார்.

தம் தொடக்க உரையில் அவர் 'தமிழ் மொழியின் தொன்மையைப் பற்றியும், அதன் சிறப்புகள்—வரலாற்றின் உண்மை இயல்புகள் இவற்றையெல்லாம் விளக்கினர்; மேலும் கூறியதாவது :—

"30 ஆண்டுகளுக்குமுன் இதே மாநிலக் கல்லூரியில் ஒரு தமிழ்ப் பண்டிதர் இருந்த நிலையை மாற்றியவர் நமச்சிவாயர் ஆவார். அவருடைய நன்முயற்சிகளின் காரணமாக இன்று பேராசிரியர்—துணைப் பேராசிரியர்—இணைப் பேராசிரியர்—இப்படி பல்வேறு வாய்ப்புகள் சிறந்தன. அப்படிப்பட்ட ஒரு நல்லாசான் நினைவாக இச்சொற்பொழிவுகள் நிகழ்வது போற்றுதற்கு உரியது.

மாணவர்கள், விருப்பு வெறுப்பு இன்றி நடுநிலையோடு ஆராய்ச்சி செய்தல் வேண்டும்; உண்மைக்கு இடந்தரல் வேண்டும். இத்தகைய தொண்டுகளில் ஈடுபட்ட இக்கழகத்தையும், கல்லூரியையும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.''

தொடக்க உரைக்குப்பின், முதல் நாள் சொற்பொழிவாக, 'மொழி இலக்கிய வரலாறுகள்' பற்றி

தலைமைக் கழக அறிக்கை : 1/68

தி. மு. கழகப் பொதுத் தேர்தல்

1. 1967-ல் நிறைவேற்றப்பட்ட தி. மு. கழகத்தின் புதிய சட்ட திட்டங்கள், விதி 25 பிரிவு 4-ன்படி, கழகத்தின் பல்வேறு அமைப்புகளுக்கான தேர்தல் நாட்கள் கீழ்க் கண்டவாறு உறுதி செய்யப்படுகின்றன :—

	அமைப்புகள்	நாட்கள்
(அ)	சிற்றூர்-பேரூர்க் கிளைகள், பெருநகர உட்கிளைகள், சென்னை நகர வட்டக் கிளைகள்	1968 மே 4, 5 சனி, ஞாயிறு
(ஆ)	நகர—பெருநகரக் கிளைகள்	மே 19 ஞாயிறு
(இ)	வட்டக் கிளைகள் (சென்னை நகரப் பகுதிக் கிளைகள்)	சூன் 2 ஞாயிறு
(ஈ)	மாவட்டக் கழகங்கள்	சூன் 23 ஞாயிறு
(உ)	தலைமைக் கழகம்	சூலை 21 ஞாயிறு

2. 1965 மே திங்களுக்குப் பிறகு உறுப்பினர் உரிமையைப் புதுப்பித்தும், புதிய உறுப்பினராகச் சேர்ந்தும், தலைமைக் கழகத்திலிருந்து முறைப்படி அனுப்பிவைக்கப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் பெற்றிருப்பவர்கள் மட்டுமே தேர்தலில் கலந்துகொள்ள உரிமையுடையவர்கள் ஆவர்.

3. தேர்தல் நடத்தும் முறைகள், கிளைகள்—உறுப்பினர்கள்—தேர்தல் ஆணையாளர்—வேட்பாளர் ஆகியோரின் கடமைகள், வேட்பாளர் விண்ணப்பத் தாள் போன்ற விவரங்கள், தலைமைக்கழகம் அச்சிட்டு வெளியிட்டுள்ள 'தி. மு. கழகத் தேர்தல் விதிமுறைகள்' என்ற வெளியீட்டில் விளக்கப்பட்டுள்ளன.

இந்த வெளியீட்டின் பிரதியும், திருத்தப்பட்ட புதிய சட்டத் திட்டப் பிரதியும் ஒவ்வொரு கிளைக்கும் தலைமைக் கழகத்திலிருந்து விரைவில் அனுப்பி வைக்கப்படும். தனிப்பட்ட முறையில் தேவைப்படுவோர் உரிய கட்டணம் செலுத்தியும் பெற்றுக்கொள்ளலாம்.

'அறிவகம்'
சென்னை-13
22—3—'68

—அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி.மு.க

சிவகாசியில் கழகப் பொதுக்கூட்டம்

31—3—68 அன்று சிவகாசி, சவுந்திரபாண்டியனார் நினைவு மன்றத்தின் சார்பில் மணிக்கட்டி ஊரணித் திடலில் ஓர் பொதுக் கூட்டம், தோழர் ச. செல்வராசன் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் எஸ்.எஸ்.நாராயணன், ஜே. சாமுவேல், ஜேர்ஸ் டிரோஸ், எஸ். எம். பொன்னுச்சாமி, எஸ்.பி. குருசாமி, நகரச் செயலாளர் ஏ. துரைக்கண்ணன், வட்டச் செயலாளர் மணியம், மாவட்டப் பிரதிநிதி வே. கருணாகரனும் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

நகரில் பல முக்கிய இடங்களில் பெங்களூர் நாராயணனும், வே. கருணாகரனும் கழகக் கொடிகளை ஏற்றிவைத்தனர்.

மேலச்சிவபுரியில் தி. மா. மு. க. துவக்க விழா

திருச்சி மாவட்டம் மேலச்சிவபுரி புலவர் கல்லூரி திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் துவக்க விழா 19—3—68-ல் தோழர் சிவ. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது; தோழர் சேவற்கொடியோன், கழகத்தைத் துவக்கி வைத்தார்; தோழியர் தமிழரசி பி.ஏ. சிறப்புரையாற்றினர்; மாவட்ட மாணவர் தலைவர் சி. இராசு, கழகத்தின் கடமை குறித்துப் பேசினர்.

மற்றும், முத்துக்கலிங்கன், நல்லமணியன், தி. மா. மு. க செயலாளர் இரா. குப்புசாமி, தலைவர் இளங்கோ, முகவை திருச்செல்வன் ஆகியோர் பேசினர். செயலாளர் நன்றி கூறினர்.

கிணறு—பம்பு செட்டுகளுக்கு கடன்

இனி நில அடமான பாங்கிகளே வழங்கும்

சென்னை, ஏப். 9—

புதிய கிணறுகள் தோண்டுவதற்கு—புதிய கிணற்று மானியத் திட்டத்தின்கீழ்—அரசு இதுவரை மானியத்துடன் கடன்கள் வழங்கி வந்துள்ளது.

எண்ணெய் எஞ்சின்கள், மோட்டார் பம்பு செட்டுகளைத் தவணைக் கொள்முதல் அடிப்படையில் வாங்கக் கடன்கள் (மானியம் இல்லாமல்) கொடுக்கப்பட்டு வந்தன.

வேளாண்மை உற்பத்தித் திட்டத்திற்குப் பெரிய அளவில் உதவ இப்பொழுது இந்திய ரிசர்வ் வங்கியும், ஆயுள் இன்சூரன்சு கார்ப்பரேஷனும், வர்த்தக வங்கிகளும் முன்வருகின்றன; ஆனால், இவற்றின் உதவி கூட்டுறவுத் துறைக்கு மட்டும்தான் கிடைக்கும்.

நிதி நிறுவன ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் வசதியைப் பெறுவதற்காக இந்த இருகாரியங்களுக்கான கடன்களை முற்றிலும் நில அடமான வங்கிகள்தான் கொடுக்கவேண்டும் என அரசு கொள்கையாகத் தீர்மானித்துள்ளது; வரவு செலவுத் திட்ட உரையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் இந்த முடிவை அறிவித்தார்.

எனவே, 1968 ஏப்ரல் முதல் நாளிலிருந்து, புதிய கிணற்று மானியத் திட்டத்தின் கீழும், எண்ணெய் எஞ்சின்கள், மோட்டார் பம்பு செட்டுகள் ஆகியவற்றின் தவணைக் கொள்முதலுக்கும் அரசு நேர்முகமாக வழங்கும் புதிய கடன்கள் நிறுத்தப்படும்.

புதிய கிணறுகள் தோண்டுவது, எண்ணெய் எஞ்சின்கள், மோட்டார் பம்பு செட்டுகள் அமைப்பது ஆகியவற்றுக்கான எல்லாக் கடன்களும் நில அடமான வங்கிகள் மூலம் மட்டுமே கிடைக்குமாறு செய்யப்படும்.

பம்பு செட்டுகளைப் பொறுத்த வரையில், நில அடமான வங்கியின் முயற்சிகளுக்கு உதவியாக வேளாண்மை—தொழிற் கார்ப்பரேஷன் இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மறு ஆணை பிறப்பிக்கப்படும் வரையில், வட்டாரங்களிலும் வருவாய்த் துறையிலும் உள்ள அலுவலர்கள் இந்த இரு காரியங்களுக்கான கடன்களுக்கு விண்ணப்பங்களை முன்போலவே பெற்று—அவற்றைப் பற்றி விசாரித்து—அந்த விண்ணப்பங்களை நில அடமான வங்கிகளுக்கு அனுப்புவார்கள்.

நில அடமான வங்கிகள், புதிய கிணறுகள் தோண்டுவதற்காக வழங்கும் கடன்களுக்கு, வழக்கமாக அளிக்கப்படும் மானியம் உண்டு; இது, ரூ. 500 என்ற உச்ச அளவிற்கு உட்பட்டு, முடிந்தபட்ட வேலை மதிப்பீட்டில் 25 சதவிகிதமாகும்.

பெங்களூர்த் தமிழ்ச் சங்கம்

சென்ற மார்ச் 31-ம் நாளன்று மேற்படி சங்கப் பொது உறுப்பினர் கூட்டம், டாஸ்கர் நகர் உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்ற போது, கீழ்க்கண்டவர்கள் 1968-69-ம் ஆண்டுக்கு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : புலவர் க. சுப்பிரமணியன்; துணைத்தலைவர் : புலவர் இராசமாணிக்கம்; செயலாளர் : புலவர் மா. விசுவநாதன்; துணைச் செயலாளர்கள் : நா. நீலகண்டன், ஆ. சி. விசுவநாதன்; பொருளாளர் : இலக்குமிநாராயணன்; செயற்குழு உறுப்பினர்கள் : பேராசிரியர் தண். கி. வேங்கடாசலம், மா. மணி, பேராசிரியர் ஆ. ம. தருமலிங்கம், இராஜேசுவரி, புலவர் மா. சிவசங்கரன், இராமகிருட்டினன், ஏ பி. சிவசுப்பிரமணியம்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி இலண்டன் பயணம்

இரஷ்யா, பிரான்சு முதலிய நாடுகளுக்கும் செல்கிறர்

சென்னை, ஏப். 9—

தமிழகச் சட்டமன்றத் தி. மு. க. உறுப்பினர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், ஐரோப்பிய நாடுகளில் ஏறத்தாழ ஐம்பது நாட்கள் சுற்றுப்பயணம் செய்வார்.

இலண்டனில் உள்ள காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கக் கிளையினர், நாடாளுமன்ற நடைமுறைகள்—மரபுகள் குறித்துப் பயிற்சி வகுப்புக்கள் நடத்துகின்றனர்; இந்தப் பயிற்சி வகுப்பு, இலண்டனில் அடுத்த மாதம் முதல்நாளிலிருந்து, 17-ம் நாள் வரை நடக்கிறது; இந்தப் பயிற்சி வகுப்பில், ஏ. வி. பி. ஆசைத்தம்பி கலந்துகொள்கிறர்.

இந்தியாவிலிருந்து இந்தப் பயிற்சி வகுப்புக்காகச் செல்லும் இரண்டு பிரதிநிதிகளில் ஒருவர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி; மற்றொருவர் மராட்டிய மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் ஆவார்.

பயிற்சி முடிந்ததும் இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் அனைவரும் வடக்கு அயர்லாந்து, ஜெர்சி ஆகிய இடங்களில் ஒரு வாரம் சுற்றுப் பயணம் செய்வார்கள்.

பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு ஆய்வுரை வழங்கினர்.

தலைவருக்கும், சொற்பொழிவாளருக்கும் புத்தாடை அணிவிக்கப்பெற்றது.

திரு. சிறுவை மோகனசுந்தரன் முதலில் கல்லூரியின் இடைவிடாப் பணிகளை விளக்கி அனைவரையும் வரவேற்றார்; புலவர் தி. த. பச்சையப்பன் நன்றி கூறினர்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பியின் சுற்றுப்பயண நிகழ்ச்சி நிரல் வருமாறு :—

ஏப். 22: சென்னையிலிருந்து பம்பாய் புறப்பாடு; 25: டெல்லியிலிருந்து மாஸ்கோ பயணம்; 28: மாஸ்கோவிலிருந்து பாரிஸ் புறப்பாடு; 30: பாரிசிலிருந்து இலண்டன் பயணம்.

மே 1-லிருந்து 17-வரை காமன் வெல்த் நாடாளுமன்றச் சங்கப் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொண்டு பயிற்சி பெறுதல்; 28: இலண்டனிலிருந்து ஹாலந்து நாட்டுக்குப் பயணம்; 30: ஹம்பர்க் புறப்பாடு; 31: பேர்லின் புறப்பாடு.

சூன் 2: பிராங்க்பர்ட் வழியாக ஜெனிவா பயணம்; 4: ஜெனிவாவிலிருந்து சூரிச் பயணம்; 5:சூரிச்சிலிருந்து ரோம் பயணம்; 7: ரோமிலிருந்து கெய்ரோ புறப்பாடு; 9: கெய்ரோவிலிருந்து லெபனன் தலைநகரான பெய்ரூட் புறப்பாடு; 11: பெய்ரூட்டிலிருந்து பம்பாய் வருகை; 12: சென்னை வந்து சேர்தல்.

அண்ணாமலைப்பல்கலைக் கழக தி. மா. மு. க.

அண்ணாமலைப் பல்கலைக் கழக திராவிட மாணவர் முன்னேற்றக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் செயலாளர் செயராமன் தலைமையில் நடைபெற்றபோது, உறுப்பினர்களாக 1968-69-ம் ஆண்டிற்குக் கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

செயலாளர் : ம. நடராசன்; துணைச்செயலாளர் : மா. காசிலிங்கம்; பொறியியல் விடுதி துணைச் செயலாளர் : தங்கவேலு; நகர துணைச்செயலாளர் : சொ. தியாகராசன்; பொருளாளர் : அ. பஞ்சநாதன்.

செஞ்சி எம். ஜி. ஆர். மன்றம்

செஞ்சி எம். ஜி. ஆர். மன்றத்திற்கு இலக்குமிபதி தலைவராகவும், பழனிவேலு செயலாளராகவும், சண்முகம் பொருளாளராகவும், மற்றும் வரதன், சையத் உசேன், அருணாசலம், சின்னசாமி, சண்முகம், கோயில் நயினார் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பொள்ளாச்சி 17-வது வட்ட கண்ணப்பன் மன்றம்

பொள்ளாச்சி 17-வது வட்டம் புகைவண்டி நிலையத் தெருவிலிருக்கும் 'அண்ணா இல்ல'த்தில், நகர தி. மு. க. செயலாளர் தி. இராமசாமி முன்னிலையில்—நகர மன்ற உறுப்பினர் வ. நமச்சிவாயம் தலைமையில் கண்ணப்பன் மன்றம் அமைக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் விவரம் :—

தலைவர் : க. கருப்புசாமி; செயலாளர் : ஊ. ப. வெங்கிட்ராசு; துணைச்செயலாளர் : அ. மைதீன்; பொருளாளர் : ச. கோபால்; செயற்குழுவினர் : வ. நமச்சிவாயம், கா. முத்துசாமி, ஆ. இராமசாமி, தி. இளங்கோ, வ. வ. நத்தர், ச. குமார்.

மேலவையில் கழகம் பெறும் புதிய இடங்கள்

கழகம் போட்டியிட்ட இடங்களில் வெற்றி

சென்னை, ஏப். 10—

தமிழகச் சட்டமன்ற மேலவைக்கு, 10 தொகுதிகளில் நடைபெற்ற தேர்தலில் நேற்று 7 தொகுதிகளின் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன ; அவற்றில் 4 இடங்கள் தி.மு. கழகத்துக்கும் 3 இடங்கள் காங்கிரசுக்கும் கிடைத்துள்ளன.

சென்னை–செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதியில் பேராசிரியர் க. அறிவழகன், தஞ்சை உள்ளாட்சி மன்றத் தொகுதியில் கோ.சி. மணி, இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதியில் பி. திருஞானம், சேலம்–தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதியில் ப.தா. முத்து ஆகியோரின் வெற்றிச் செய்தி நேற்றே அறிவிக்கப்பட்டது.

ஏற்கனவே, சட்டமன்றத் தொகுதியிலிருந்து கழக வேட்பாளர்கள் டி.கே. பொன்னுவேலு, பொன்மலை பராங்குசம், இராகவானந்தம், தங்கபாண்டியன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

சென்னை மாநகராட்சி மன்றத் தொகுதியிலிருந்து அறிஞர் அண்ணா அவர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இதுவரை மேலவைக்கு 13 இடங்களுக்கான தேர்தல்கள் முடிந்துவிட்டன ; இவற்றில் 9 இடங்களை தி.மு. கழகம் கைப்பற்றியிருக்கிறது.

காங்கிரசு 4 இடங்களையும், சுதந்தரா ஓர் இடத்தையும், முஸ்லிம் லீக் ஓர் இடத்தையும் பெற்றுள்ளன.

இதுவரை மேலவைக்கு நடைபெற்ற தேர்தல்களில் கழக வேட்பாளர்களாகப் போட்டியிட்ட அனைவருமே வெற்றி பெற்றுவிட்டனர்.

இத்திங்கள் 21-ம் நாளிலிருந்து மேலவையில் 21 புதிய உறுப்பினர்கள் இடம் பெறுவர். (சட்டமன்றத்திலிருந்து 7 பேரும், உள்ளாட்சி மன்றத் தொகுதிகளிலிருந்து 7 பேரும், பட்டதாரித் தொகுதியிலிருந்து இருவரும், ஆசிரியர் தொகுதியிலிருந்து இருவரும் ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 பேருடன், ஆளுநரால் நியமிக்கப்படும் மூவரும் சேர்ந்து 21 பேர் ஆவர்.)

இவர்கள் அனைவரும் 1968 ஏப்ரல் 21-ம் நாள் முதல் ஆறுண்டுக் காலத்துக்குப் பதவி வகிப்பர்.

வாக்குகள் விவரம்

★

தஞ்சை உள்ளாட்சிமன்றத் தொகுதி

மொத்த வாக்குகள்		2338
பதிவானவை		2271
கோ. சி. மணி	(தி.மு.க.)	855
என. சுந்தரேச தேவர்	(கா.)	689
ஜி. சக்கரபாணி		596
கே. கே. நடராச பிள்ளை		15
செல்லாதவை		116

இது இரட்டைத் தொகுதி ; ஒரே இடத்துக்குத்தான் கழகம் வேட்பாளரை நிறுத்தியது. முதல் இருவரும் வெற்றி பெற்றனர் ; கடைசி வேட்பாளர் பொறுப்புத் தொகை இழந்தார்.

சென்னை—செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி

மொத்த வாக்குகள்		4706
பதிவானவை		2837
க. அறிவழகன்	(தி.மு.க.)	1857
வி. கே. பார்த்தசாரதி		434
வி. என். பாலசுப்பிரமணியம்	(காங்.)	350
டி. ஆதிமூலம்		73
செல்லாதவை		123

இராமநாதபுரம் மாவட்ட உள்ளாட்சிமன்றத் தொகுதி

மொத்த வாக்குகள்		1983
பதிவானவை		1925
பி. திருஞானம்	(தி.மு.க.)	531
ஆர். சுந்தரராசன்		490
எஸ். செயராம ரெட்டியார்		437
வி. வேலாயுதம் செட்டியார்		382
வி. இராமலிங்கம்		10
பி. சுப்பையா		2
செல்லாதவை		73

இந்த இரட்டைத் தொகுதியில் ஒரே இடத்துக்குத்தான் கழகம் வேட்பாளரை நிறுத்தியது.

கழக வேட்பாளர் திருஞானமும், காங்கிரசு வேட்பாளர் செயராம் ரெட்டியாரும் வெற்றி பெற்றனர்.

திரு. ஆர். சுந்தரராசன் அதிக வாக்குகள் பெற்றிருந்தும், ஒற்றை மாற்று ஓட்டுக் கணக்கு முறையின் விளைவாகத் திரு. செயராம ரெட்டியாருக்கு வெற்றி வாய்ப்புக் கிடைத்தது.

கடைசி இருவரும் பொறுப்புத் தொகை இழந்தனர்.

சேலம்—தர்மபுரி மாவட்ட உள்ளாட்சிமன்றத் தொகுதி

மொத்த வாக்குகள்		2487
பதிவானவை		2388
டி. எம். காளியண்ணன்	(காங்)	1535
ப. தா. முத்து	(தி.மு.க.)	586
சி. ஆர். நரசிம்மன்	(சுத)	85
செல்லாதவை		184

இந்த இரட்டைத் தொகுதியில் முதல் இருவரும் வெற்றி பெற்றனர். கடைசி வேட்பாளர் பொறுப்புத் தொகை இழந்தார்.

இடைத் தேர்தல்கள்

தென்னாற்காடு—வட ஆற்காடு மாவட்ட ஆசிரியர் தொகுதிக்கும், தென்னாற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதிக்கும் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில் கழக வேட்பாளர்கள் முறையே ப. உ. சண்முகமும், குறிஞ்சிப்பாடி சாம்பசிவமும் போட்டியிடுகின்றனர் என்பது தெரிந்ததே.

வைகையில் மற்றொரு அணை

ரூ. 4 கோடி செலவில் கட்டத் திட்டம்

மதுரை, ஏப். 9—

வைகை ஆற்றின் மீது இரண்டாவது அணை கட்டுவது பற்றி தமிழக அரசு பரிசீலனை செய்து வருகிறது.

தற்போது உள்ள அணைக்கட்டுக்குக் கீழே இன்னொரு அணைக் கட்டுக் கட்டப்படும்.

பருவ மழை மிகுதியாகப் பெய்யும்போது வைகை அணைக்கட்டு நிரம்பி, தண்ணீர் வழிந்து வீணாகப் போகிறது ; அப்படித் தண்ணீர் வீணாகப் போகாமல் தடுக்க இரண்டாவது அணைக்கட்டு பயன்படும்.

மதுரையிலிருந்து 40 கல் தொலைவில் பேரணைக் கால்வாய்க்குத் தண்ணீர் திறந்துவிடும் இடம் இருக்கிறது ; அதற்கு மேற்புறத்தில் புதிய அணைக்கட்டு கட்டப்படலாம் ; அதற்கு ரூ. 4 கோடி செலவாகும்.

மதுரை சுழற்குழுவும் அமெரிக்கச் செய்தி அறிவிப்பு நிலையமும் கூட்டாக நடத்திய நீர் வழங்குவது பற்றிய கருத்தரங்கில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் நரசிம்மன் பேசுகையில் மேற்கண்ட தகவல்கள் வெளியிட்டார்.

விழாவுக்கு மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமை வகித்தார்.

குழுக் கூட்டம்

தென்னிந்திய சினிமாத் தொழிலாளர் சங்க ஆண்டுப் பேரவைக் கூட்டம், 11—4—68 காலை 9-மணிக்கு, சிந்தாதிரிப்பேட்டை சாமி நாய்க்கன் தெரு, 124/125 எண்ணுள்ள வேதாந்தச் சங்கக் கட்டிடத்தில் நடைபெறும் ; சங்க உறுப்பினர் அனைவரும் கலந்து கொள்ளுமாறு பொதுச்செயலாளர் கே. சுப்பராயலு கேட்டுக் கொள்கிறார்.

கா. காளிமுத்து நிகழ்ச்சிகள்

ஏப். 11 : சத்தாளம்பட்டி ; 12 : மதுரை (12-வது வட்டம்) ; 13 : டி. கரிசல்குளம் ; 14 : காட்டு நாயக்கன்பட்டி ; 21 : கும்பகோணம்.

மேலவைத் இடைத் தேர்தல்

மே 10-ல் வாக்குப் பதிவு

சென்னை, ஏப். 10—

தமிழகச் சட்டமன்ற மேலவைக்குத் தென்னாற்காடு உள்ளாட்சித் தொகுதிக்கு மே 10-ம் நாளன்று இடைத் தேர்தல் நடைபெறும்.

மேலவை உறுப்பினர் ஜெங்கால் ரெட்டியார் இயற்கையெய்தியதால் இந்தத் தொகுதியில் தேர்தல் நடைபெறுகிறது.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் இறுதி நாள் ஏப். 15.

வேட்பு மனுக்கள் பரிசீலனை : ஏப். 16.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறும் இறுதி நாள் : ஏப். 18.

போட்டியிருந்தால், மே 10-ம் நாள் தேர்தல் நடைபெறும்.

தமிழகத்தின் முதல் திறந்தவெளிச் சிறை - தஞ்சையில் ஏற்படுத்த திட்டம்

கைதிகளுக்கு ஊதியம்-காபி, தேநீர் அருந்தவசதி

வேலூர், ஏப். 10—

"தமிழகத்தில் முதல் திறந்த வெளிச் சிறை, தஞ்சையில் அமைக்கப்படும் ; தஞ்சை நகர் அருகில் உள்ள 110 ஏக்கர் நிலம், திறந்தவெளி சிறைக்காகப் பயன்படுத்தப்படும்"

என்று, சிறைச்சாலைகளின் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஸ்ட்ராசி தெரிவித்துள்ளார்.

கைதிகளுக்கு ஊதியம்

கைதிகளுக்குச் சம்பளம் தரும் திட்டம் குறித்து அவர் கூறியதாவது :—

"சிறைகளில் கைதிகளை, கைத்தொழில் தெரிந்தவர்கள்—அரைகுறையாகத் தெரிந்தவர்கள்—தெரியாதவர்கள் என மூன்று வகையாகப் பிரித்து, அவர்களுக்குச் சம்பளம் தரும் திட்டம் ஒன்று தமிழக அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

"கேரளம், மாராட்டிரம், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில், கைதிகளுக்குச் சம்பளம் தரப்படுகிறது. தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள நாள் கூலி—தொழில் தெரிந்த கைதிகளுக்கு 50 காசு ; அரைகுறையாகத் தொழில் தெரிந்த கைதிகளுக்கு 37 காசு ; தொழில் தெரியாத கைதிகளுக்கு 25 காசு.

"சிறைகளில் காபி, தேநீர் கடைகள் திறந்து, அவற்றில் கைதிகள் தங்கள் கூலிப் பணத்திலிருந்து பிஸ்கட்—காபி—தேநீர் போன்றவைகளை வாங்குவதற்கு அனுமதிக்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது."

10,000 பேர் கைது

அமெரிக்கக் கலவர எதிரொலி

டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தில், அமெரிக்காவைச் சேர்ந்த பல்வேறு நகரங்களைச் சார்ந்த 10,000 பேர்கள் இதுவரை கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இக்கலவரத்தில், 1,600க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

பட்டப்படிப்புவரையில் ஆங்கிலம் கட்டாயம்

மத்திய அரசுக்குப் பரிந்துரை

புதுடில்லி, ஏப் 10-

பல்கலைக் கழகப் பட்டப்படிப்பு அளவில் 'ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்பட வேண்டும்' என்ற யோசனையை தேசீயக் கல்வி நிறுவனம், மத்திய கல்வி அமைச்சகத்திற்கும், பல்கலைக்கழக மானியக் குழுவிற்கும் வழங்கியிருக்கிறது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

11--4--68

சென்னை 31-வது வட்டம்

எம். ஜி. ஆர். ரசிகர் மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு வாடியா நகர் அப்பாசாமி பிள்ளை வீதியில் ; தலைவர் : கு. ஆறுமுகம் ; பேசுவோர் : கி. மனோகரன் எம்.ஏ., எம.பி., சி. சிட்டிபாபு எம்.பி., வி. டி. அண்ணாமலை எம்.எல்.ஏ., எம். குமார், டி. நடராசன் எம்.சி., மா. மு. கிருட்டினசாமி, அமுதா ராகவன்.

சேலம் மாவட்ட தி. மா. மு. க.

சேலம் மாவட்ட தி. மா. மு. க. நிர்வாகிகளாகக் கீழ்க்கண்டவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் :—

அவைத் தலைவர் : மா. அய்யாசாமி பி.எஸ்.சி.

துணைத் தலைவர் : கோ. குணசேகரன்.

பொருளாளர் : அ. மோகன்ராசு.

செயலாளர் : இரா. இரகுபதி.

இணைச்செயலாளர் : வ. மோகன்பாபு.

அமைப்புச்செயலாளர் : கே. செல்வராசு.

சேலம் நகரக் கிளைகள்

சேலம் அரசினர் கலைக் கல்லூரி : க. செயபால், இரா. சண்முகம், ஆறுமுகம்.

அரசினர் பொறியியற் கல்லூரி : பி எல். எஸ். சுப்பிரமணியன்.

தியாகராசர் தொழிலியற் கல்லூரி : மா. கருணாநிதி.

பாவடி உயர்நிலைப் பள்ளி : அ. மூர்த்தி, மனோகரன், இராமதாசு.

அருணாசல ஆசாரித் தெரு உயர்நிலைப் பள்ளி : ம. பாஸ்கர், ஆ. ஜான்.

ஆத்தூர் :

அரசினர் உயர்நிலைப் பள்ளி : எஸ். சக்கரவர்த்தி.

நாமக்கல் :

பி. வீரப்பன், மு. சி. இராமசாமி.

மேட்டூர் :

ஆசிரியப் பயிற்சி பள்ளி : க. சண்முகம்.

ஓமலூர் :

உயர்நிலைப் பள்ளி : ஏ. தங்கவேலு, ஏ. இக்பால்.

பெத்துநாயக்கன் பாளையம், காள்செட்டியூர் :

கே. ஆர். சுப்பிரமணியன், எம். கவியரசு.

வலசையூர் :

அரசினர் உயர்நிலைப் பள்ளி : வி. வைத்திலிங்கம்.

ரோஜா
பாக்கு &
புகையிலை
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

காங்கிரசு எம்.எல்.ஏ.-மீது வழக்கு

கூட்டுறவுச் சங்கத்தில் பணம் கையாடியதாகக் குற்றச்சாட்டு

கோவை, ஏப். 10—

கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் கூட்டுறவுச் சங்கத்தில் ரூ. 10,500 கையாடப்பட்டது சம்பந்தமாக மேற்குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கத் தலைவரும் காங்கிரசு சட்டமன்ற உறுப்பினருமான டி. டி. திப்பையா, மற்றும் மூவர்மீது கோவை அடிஷனல் முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றத்தில் போலீசாரால் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இவர்கள்மீது கையாடல், பொய்க் கணக்கு எழுதியது, சாட்சிகளை ஜோடித்தது ஆகிய குற்றங்கள் செய்ததாக வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.